முருகப்பெருமான் துணை

**மகான் நாதாந்தச் சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.05.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. வரம் தரும் ஞான குருவே
வள்ளலாய் வாழும் ஞானியே
அறம் எனும் உன் சக்திவழி
அகிலம் மாறுவது உறுதிஎனக் கூறி
2. கூறியே அருளாசி தன்னை
குறைவிலா சுபகிருது தகர் திங்கள்
இருபானை திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 25 ம் நாள், 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
இயம்புவேன் நாதாந்தச் சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் ஞான வழி காட்டும்
ஞான தேசிகன் வழிதன்னை
நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருகவே நிலைகள் யாவும்
வளர்ச்சி முகமாக மாறி
தருகின்ற குணமும் பலமும்
தனித்துவமும் வளரக்கூடும்
5. கூடவே மக்களை காக்கும்
குறைவிலா ஞானசக்தி
சுடராக உலகினில் பரவ
சுத்த சைவ நெறி காட்டும் ஞானியே
6. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் சக்திதனை
இனிமைபட உலக மக்கள் அறிய
எங்கும் மாற்றம் தேற்றமாக
7. ஆகவே புதுமைகள் கூடி
ஆளுமையும் மாற்றம் காணும்
மிகைபட தேவைக்கு மேல்
மேன்மைதரும் பொருள்வளமும் கண்டு
8. கண்டுமே கலியினில் மாற்றம்
கந்தவேலன் வடிவாகவே
தொண்டுவழி எங்கும் படைகள்
தேசிகன் ஞானப்படைகளாகி
9. ஆகியே மாற்றம் நிகழும்
ஆபத்து பேரிடர் பிரளயமிலா
அகிலம் பெரும் பாதுகாப்புபெறும்
ஆற்றல் மிக்க ஞான குருவே

10. குருவாக நீ தரும் தீட்சை
குலம் காக்கும் கருமவினை போக்கும்
திருவருளாக உருமாறி வந்து
துணைநின்று கடைத் தேற்றும்

11. தேற்றம் தரும் ஞான குருவே
தெய்வபலமிக்க சற்குருவே
மாற்றம் உன்னால் சடுதி உண்டு
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–